# பதவி வெற்றிடங்கள்

## அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்
## சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு

பின்வரும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப தகுதி வாய்ந்த, காத்திரமான, சுய ஊக்கம் உடைய, அணியாக பணியாற்றும் பணி ஆர்வம் உடைய நபர்களிடமிருந்து அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் விண்ணப்பங்களை கோருகின்றது.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:

i. இலங்கைப் பிரஜையாகவும்
ii. பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும், தீவில் எப்பாகத்திலேனும் பணியாற்றவும் உடலியல், உளவியல் ரீதியில் தகுதி உடையவராகவும்
iii. சிறந்த நல்லொழுக்கம் உடையவராகவும்

இருக்க வேண்டும்.

### 1. பொது முகாமையாளர் (HR 2-1)

பொது முகாமையாளர் என்பவர் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் அதி உயர் தர நிறைவேற்று அதிகாரி ஆவார். பொது முகாமையாளர் நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நிதி விவகாரங்கள் உட்பட எல்லா நடவடிக்கைகளுக்கும் பொறுப்பானவராகவும் பதிலளிக்கத் தக்கவராகவும் இருப்பதுடன், பணிப்பாளர்சபையின் பொது வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் அதிகாரங்களை பயன்படுத்துதல், செயற்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதலுடன், பணிப்பாளர் சபையினால் ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றி, உத்தியோகபூர்வ அடைவுகளிலும் தொழிநுட்ப உருவாக்கம் மற்றும் பரிமாற்றத்தில் சிறந்து விளங்குவதற்காக அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் பணியாட்தொகுதிக்கு தலைமைத்துவத்தையும் ஊக்கமளிப்பையும் வழங்குதல்.

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (கீழே உள்ள 1 அல்லது 2)**

1. விஞ்ஞானம் அல்லது வியாபார நிர்வாகம் அல்லது பொது நிர்வாகம் அல்லது நிதி அல்லது வியாபார முகாமைத்துவம் அல்லது உற்பத்தி பொறியியல் அல்லது பதவிக்கு தொடர்புடையதான ஒரு துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்டம்

அத்துடன்

விஞ்ஞானம் அல்லது வியாபார முகாமைத்துவம் அல்லது பொது நிர்வாகம் அல்லது நிதி அல்லது வியாபார முகாமைத்துவம் அல்லது உற்பத்தி பொறியியல் அல்லது பதவிக்கு தொடர்புடையதான ஒரு துறையில் பட்டப்பின்படிப்பு (முதுமாணி) பட்டம் அல்லது பதவிக்கு தொடர்புடையதான ஒரு துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்வாண்மை பட்டய நிறுவகம் ஒன்றில் பெருநிறுவன அங்கத்துவம்

அதனுடன்

முதலாம் பட்டம் பெற்ற பின்னர் கூட்டுத்தாபனத்திலோ, நியதிச்சட்டசபையிலோ அல்லது நன்கறியப்பட்ட வணிக நிறுவனத்திலோ ஆகக்குறைந்தது 18 வருட முகாமைத்துவ அனுபவமும் அதில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 5 வருட அனுபவமும் கொண்ட நிரூபிக்கப்பட்ட செயல் திறன்

2. விஞ்ஞானம் அல்லது வியாபார நிர்வாகம் அல்லது பொது நிர்வாகம் அல்லது நிதி அல்லது வியாபார முகாமைத்துவம் அல்லது உற்பத்தி பொறியியல் அல்லது பதவிக்கு தொடர்புடையதான ஒரு துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்டம்

மற்றும்

சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு துறையில் முனைவர் பட்டம்

அத்துடன்

முதலாம் பட்டம் பெற்ற பின்னர் கூட்டுத்தாபனத்திலோ, நியதிச்சட்டசபையிலோ அல்லது நன்கறியப்பட்ட வணிக நிறுவனத்திலோ சிரேஷ்;ட முகாமைத்துவ மட்டத்தில் 5 வருட அனுபவமும் கொண்ட நிரூபிக்கப்பட்ட செயல் திறன்

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

**உள்வாரி விண்ணப்பதாரிகள்:**

பதவிக்கு சம்பந்தப்பட்ட துறையில் சிரேஷ்;ட முகாமையாளர் (HM) வகுதியில் ஆகக்குறைந்தது (5) வருடங்கள் திருப்திகரமான சேவை

மற்றும்

பல்-துறை சார்ந்த அணிகளை தலைமை தாங்கவும் வழி நடத்தவும் தேவையான நிரூபிக்கப்பட்ட திறன். மனித வளங்கள் மற்றும் பிற வளங்களின் முறையான பயன்பாடு

**சம்பள அளவுத்திட்டம்:** HM 2-1 ரூ.(161,140-12 X 4,850 =219,340)

(MSD சுற்றறிக்கை இல. 01/2025 அட்டவணை II இன் படி, 01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 161,140= வழங்கப்படும் என்பதுடன் **2026 ஆம் ஆண்டிற்கான தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 140,317/= ஆகும்).**

மேலே குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

**வயது:** 35 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். உள்ளகப் விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

**ஏனைய அனுகூலங்கள்:**

- கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்படும் உத்தியோகபூர்வ வாகனம் அல்லது PED 1/2015 (1) இலக்க சுற்றறிக்கையின் படி சொந்த வாகனத்திற்கான கொடுப்பனவு
- எரிபொருள் கொடுப்பனவு (ஒரு மாதத்திற்கு 145 லீட்டர்கள் டீசல் அல்லது பெற்றோல்)

## 2. பிரதி பொது முகாமையாளர்-திட்டமிடல் மற்றும் கொள்முதல் (HR 1-1)

**கடமைகள்:**

திட்டமிடல் மற்றும் கொள்முதல் பிரிவின் தலைமை அதிகாரியாக இருப்பதுடன் திட்டமிடல் மற்றும் கொள்முதல் பிரிவுடன் தொடர்புடைய பின்வரும் சகல பணிகளுக்கும் பொது முகாமையாளருக்கு பதிலளிக்க கடமைப்பட்டவர்:

1. உற்பத்தி திட்டமிடல், மூலப்பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்களை பட்டியற்படுத்துதல், சரக்கிருப்பு கட்டுப்பாடு மற்றும் களஞ்சிய முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சகல விடயங்களும்
2. மருந்தாக்கலுடன் தொடர்புடைய மூலப்பொருட்கள், இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள் உள்ளிட்டவற்றை ஒப்பந்தப்புள்ளி நடைமுறையூடாக இறக்குமதி செய்தல்
3. கடன்கடிதங்கள் திறத்தல் மற்றும் ஏனைய வங்கிசார் நடவடிக்கைகள், சுங்க அனுமதி விடயங்களை கையாளுதல், சரக்கு கையாளுகை, கடல்சார் காப்புறுதி மற்றும் உள்ளூர் கொள்வனவுகள் என்பவற்றை கண்காணித்தல்
4. தரம் சார் விடயங்கள் மற்றும் சரக்கு அகற்றல் போன்றவற்றை கவனத்தில் கொள்ளுதல்
5. தற்போதைய சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (cGMP) மற்றும் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் தர முகாமைத்துவ பொறிமுறை என்பவற்றை கண்காணித்தலும் அவற்றை நிறுவ உதவுதலும்
6. பொது முகாமையாளரினால் ஒப்படைக்கப்படும் ஏனைய பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

வியாபார முகாமைத்துவம் அல்லது பொது நிர்வாகம் பொது முகாமைத்துவம், வர்த்தகம், விநியோக சங்கிலி முகாமைத்துவம் அல்லது பதவிக்கு தொடர்புடையதான ஒரு துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்டம்

அத்துடன்

பதவிக்கு தொடர்புடையதான ஒரு துறையில் பட்டப்பின்படிப்பு (முதுமாணி) பட்டம் அல்லது பதவிக்கு தொடர்புடையதான ஒரு துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்வாண்மை பட்டய நிறுவகம் ஒன்றில் இணை உறுப்பினர் அங்கத்துவம்

மற்றும்

முதலாம் பட்டம் பெற்ற பின்னர் கூட்டுத்தாபனத்திலோ, நியதிச்சட்டசபையிலோ அல்லது நிறுவனத்திலோ அல்லது நன்கறியப்பட்ட தனியார் நிறுவனத்திலோ முகாமைத்துவ மட்டத்தில் 12 வருட அனுபவமும் கொண்ட நிரூபிக்கப்பட்ட செயல் திறன்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்: (கீழே உள்ள 1 அல்லது 2)**

1. வெளிவாரி விண்ணப்பதாரிகளினால் பூர்த்தி செய்யப்படவேண்டிய தேவைகளை பூர்த்தி செய்திருத்தல்
2. பதவிக்கு தொடர்புடையதான ஒரு துறையில் முகாமையாளர் (MM) வகுதி I பதவியில் இரண்டு (2) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் பதவிக்கு தொடர்புடையதான ஒரு துறையில் பட்டப்பின்படிப்பு (முதுமாணி) பட்டத்தகைமை அல்லது பதவிக்கு தொடர்புடையதான ஒரு துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்வாண்மை பட்டய நிறுவகம் ஒன்றில் இணை உறுப்பினர் அங்கத்துவம்

**சம்பள அளவுத்திட்டம்:** HM 1-1 ரூ.(140,640-15 X 4,100 =202,140)

(MSD சுற்றறிக்கை இல. 01/2025 அட்டவணை II இன் படி, 01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 140,640/= வழங்கப்படும் என்பதுடன் **2026 ஆம் ஆண்டிற்கான தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 123,019/= ஆகும்**).

மேலே குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.

**வயது:** 35 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். உள்ளகப் விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

**ஏனைய அனுகூலங்கள்:**

- கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்படும் உத்தியோகபூர்வ வாகனம் அல்லது PED 1/2015 (1) இலக்க சுற்றறிக்கையின் படி சொந்த வாகனத்திற்கான கொடுப்பனவு
- எரிபொருள் கொடுப்பனவு (ஒரு மாதத்திற்கு 115 லீட்டர்கள் டீசல் அல்லது பெற்றோல்)

3. **பிரத்தியேக செயலாளர் (JM 1-1 தரம் II)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (கீழே உள்ள 1 அல்லது 2)**

1. சம்பந்தப்பட்ட துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப்பட்டம்

2. பதவிக்கு சம்பந்தப்பட்ட துறையில் ஒரு டிப்ளோமா/உயர் டிப்ளோமா (கற்கைநெறியின் காலப்பகுதி, ஒரு வருடத்திற்கு குறைந்ததாக இருத்தலாகாது) தரத்தை பெற்றிருத்தல்

மற்றும்

கூட்டுத்தாபனத்திலோ, சபையிலோ அல்லது நன்கறியப்பட்ட அரச நிறுவனம் ஒன்றில் சம்பந்தப்பட்ட துறையில், பதவிக்கு பின் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (கீழே உள்ள 1 அல்லது 2)**

1. வெளிவாரி விண்ணப்பதாரிகளினால் பூர்த்தி செய்யப்படவேண்டிய தேவைகளை பூர்த்தி செய்திருத்தல்

2. முகாமைத்துவ உதவியாளர்-தொழிநுட்பவியல் அற்ற (MA-1-1) IIம் தரப் பிரிவில் குறைந்த பட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல்

**சம்பள அளவுத்திட்டம்:** JM 1-1 ரூ.(72,650-10 x 1,360-18 x 2,040 = 122,970)

(MSD சுற்றறிக்கை இல. 01/2025 அட்டவணை II இன் படி, 01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 72,650/= வழங்கப்படும் என்பதுடன் **2026 ஆம் ஆண்டிற்கான தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 65,633/=ஆகும்**).

**வயது:** 22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். உள்ளகப் விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை:** எழுத்து மூலமான போட்டிப்பரீட்சை மற்றும் /அல்லது கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

4. **பயிற்சியளிப்பு மற்றும் அபிவிருத்தி அலுவலர் (JM 1-1 தரம் II)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

மனித வள முகாமைத்துவம், வியாபார முகாமைத்துவம், பொது முகாமைத்துவம் அல்லது வர்த்தகம் போன்ற துறைகளில் இருந்து பெறப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (கீழே உள்ள 1 அல்லது 2)**

1. வெளிவாரி விண்ணப்பதாரிகளினால் பூர்த்தி செய்யப்படவேண்டிய மேலே குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்திருத்தல்

2. விடயத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ உதவியாளர்-தொழிநுட்பவியல் அற்ற (MA 1-1) IIம் தரப் பிரிவில் குறைந்த பட்சம் 05 வருட கால திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல்

**சம்பள அளவுத்திட்டம்:** JM 1-1 ரூ.(72,650-10 x 1,360-18 x 2,040 = 122,970)

(PED சுற்றறிக்கை இல. 01/2025 அட்டவணை II இன் படி, 01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 72,650/= வழங்கப்படும் என்பதுடன் **2026 ஆம் ஆண்டிற்கான தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 65,633/= ஆகும்**).

**வயது:** 22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல்.

உள்ளகப் விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை:** எழுத்து மூலமான போட்டிப்பரீட்சை மற்றும் /அல்லது கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

## 5. பொறியியல் உதவுனர் (கணினி வன்பொருள்) (JM 1-1 தரம் II)

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (கீழே குறிப்பிட்ட 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4)**

1. கணினி விஞ்ஞானம் அல்லது கணினி பொறியியல் துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இளமாணிப் பட்டம்

2. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்கொள்ளப்பட்ட தொழிநுட்ப/ வாழ்தொழில் பயிற்சி நிறுவகம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய வாழ்க்கைதொழில் தகைமை மட்டம் 7 இற்கு குறையாத கணினி வன்பொருள் துறையில் திறன் சான்றிதழ்

3. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்கொள்ளப்பட்ட தொழிநுட்ப/ வாழ்தொழில் பயிற்சி நிறுவகம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய வாழ்க்கைதொழில் தகைமை மட்டம் 6 இற்கு குறையாத கணினி வன்பொருள் துறையில் திறன் சான்றிதழ்

அத்துடன்

கூட்டுத்தாபனத்திலோ, சபையிலோ அல்லது நன்கறியப்பட்ட அரச நிறுவனம் ஒன்றில் சம்பந்தப்பட்ட துறையில், பதவிக்கு பின் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட அனுபவம்

4. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்கொள்ளப்பட்ட தொழிநுட்ப/ வாழ்தொழில் பயிற்சி நிறுவகம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய வாழ்க்கைதொழில் தகமை மட்டம் 5 இற்கு குறையாத கணினி வன்பொருள் துறையில் திறன் சான்றிதழ்

அத்துடன்

கூட்டுத்தாபனத்திலோ, சபையிலோ அல்லது நன்கறியப்பட்ட அரச நிறுவனம் ஒன்றில் சம்பந்தப்பட்ட துறையில், பதவிக்கு பின் ஆகக்குறைந்தது பத்து (10) வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (கீழே உள்ள 1 அல்லது 2)**

1. வெளிவாரி விண்ணப்பதாரிகளினால் பூர்த்தி செய்யப்படவேண்டிய மேலே குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்திருத்தல்

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

2. விடயத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ உதவியாளர்-தொழிநுட்பவியல் (MA 2-1) IIம் தரப் பிரிவில் குறைந்த பட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல்

**சம்பள அளவுத்திட்டம்:** JM 1-1 ரூ.(72,650-10 x 1,360-18 x 2,040= 122,970)

(PED சுற்றறிக்கை இல. 01/2025 அட்டவணை II இன் படி, 01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 72,650/= வழங்கப்படும் என்பதுடன் **2026 ஆம் ஆண்டிற்கான தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 65,633/= ஆகும்).**

**வயது:** 22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். உள்ளகப் விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை:** எழுத்து மூலமான போட்டிப்பரீட்சை மற்றும் அல்லது கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

**பக்க நன்மைகள்:**

- வரவு மற்றும் செயலாற்றுகை ஊக்குவிப்புத்தொகை
- பயன்படுத்தாத வருடாந்த மற்றும் சுகயீன லீவுகளை பணமாக்கல்
- மருத்துவக் காப்புறுதி கிடைத்தல் மற்றும் மருத்துவச் செலவுகள் மீளளிப்பு
- EPF இற்கு சம்பளத்தின் 15% வீதம் கூட்டுத்தாபனத்தால் பங்களிக்கப்படுதல் மற்றும் 10% வீதம் ஊழியர்களால் பங்களிக்கப்படுதல்
- ETFஇற்கு சம்பளத்தில் 3% கூட்டுத்தாபனத்தால் பங்களிக்கப்படுதல்.
- 1983 இன் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைச் சட்டத்திற்கும், MSD சுற்றறிக்கைக்கும் இணங்க பணிக்கொடை செலுத்தப்படுதல்
- மேலும் ஏனைய பக்க நன்மைகள்

**பொதுவான அறிவுறுத்தல்கள்:**

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

- குறித்துரைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தைப் பயன்படுத்தி தயாரித்த விண்ணப்பங்கள் உறவினர் சாராத இரண்டு நடுவர்களின் பெயர்களையும், முகவரிகளையும் மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். எல்லாக் கல்வி சான்றிதழ்களினதும் சான்றுபடுத்தப்பட்டுள்ள பிரதிகள் விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் தனித்தனி கடிதவுறையில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் https://www.spmc.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து தரவுறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

- அரசாங்கத் திணைக்களங்களிலும் மற்றும் நியதிச்சட்ட சபைகளிலும் பணியாற்றுகின்ற ஊழியர்கள், இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அதற்கான நியமனத்தை ஏற்றுக்

Gazette.lk AMBITIONS REALIZED

கொள்ளும் வகையில் அவர்கள் விடுவிக்கப்படுவார்களா என்பதை சான்றுபடுத்த வேண்டிய தத்தமது நிறுவனத் தலைவர்களின் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

- விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தை தாங்கிவருகின்ற கடித உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு கீழ்காணும் முகவரிக்கு இந்த விளம்பரத் திகதியிலிருந்து 10 வேலை நாட்களுக்குள் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

- மேற்குறித்த தேவைப்பாடுகளை அனுசரிக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்**
இலக்கம் 11,சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை
கந்தவெல எஸ்ட்ரேட் – இரத்மலான
18.10.2026

SINCE 2014
Gazette.lk
AMBITIONS REALIZED

SINCE 2014
Gazette.lk
AMBITIONS REALIZED